# PROBLEMS FACED BY CHILDREN AFFECTED BY THE WAR AND THE SOLUTIONS. WITH SPECIAL REFERENCE TO CHILDRENS' HOME IN THE MULLAITHVU DISTRICT.

362.7072
KAS

PR

MISS. KASHAGINI- KANESHAMOORTHY

FCM542
Project Report
Library - EUSL

DEPARTMENT OF ECONOMICS,
FACULTY OF COMMERCE AND MANAGEMENT,
EASTERN UNIVERSITY,
SRILANKA,

2002.

ஆய்வுச்சுருக்கம்

விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் இன்றைய மனித வாழ்க்கை இலகுபடுத்தப்பட்டுள்ள அதே வேளை பல அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. புல்வேறு சாதனைக் கருவிகளை கண்டுபிடித்த உலகம் இன்று கணனி யுகத்தில் பல்வேறு புதுமைகளைச் செய்து வருகின்றது. இக்கண்டுபிடிப்புக்குள்ளேயே இன்று மனிதன் நினைத்து பார்க்க முடியாத பேரழிவுக்கு காரணமாக அமைகின்ற அணுவாயுத உற்பத்திகளும், யுத்ததளபாடங்களும் அடங்குகின்றன. இன்று உலகின் எந்தவொரு மூலையிலும் போர் அபாயச் சூழல் நிலவிக்கொண்டே இருக்கின்றது. இதனால் பொருளாதார அழிவுகள், உயிரழிவுகள், மனித உதிமை மீறல்கள் என்ற அடிப்படையில் மனிதன் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இந்நிலையில் மனித உரிமைகளை நிலைநிறுத்துவது, பெறுமதி வாய்ந்த மனித உயிர்களைப் பாதுகாப்பதும், மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதும் தொடர்பான அவசியத்தை இன்று சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை போரினால் பாதிக்கப்படும் அனைத்து மக்களுக்கும் நிறைவான சேவையையோ அபிவிருத்தியினையோ முன்னெடுத்துச் செல்லமுடியாது. இதற்கு அரசியல் தலையீடுகள் அரசகொள்கைகள் நிதிப்பற்றாக்குறைகள் போன்றவை காரணமாக அமைகின்றன. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இப்பிரச்சினைகள் இல்லாதிருப்பதனால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றன. இருப்பினும் இவற்றின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்ற அடிப்படையில் சிறுவர் சமூகம் ஒரு நாட்டிற்கு முக்கிமானதொரு சொத்தாகும். இன்றைய யுத்த சூழ்நிலையில் பல சிறுவர்கள் அனாதரவாக்கப்பட்ட நிலையில் பல சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே போரினால் பாதிக்கப்பட்டு சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் வாழ்க்கை நிலை பற்றியும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு பற்றியும், தீர்வுக்கான ஆலோசனை பற்றியும் இவ்வாய்வு அமைகின்றது.

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆய்வுச் சுருக்கம் | I |
| நன்றியுரை | II |
| அட்டவணை விபரம் | III-IV |
| விளக்கப்பட விபரம் | IV-V |
| அத்தியாயம் 01 | 01-06 |
| அத்தியாயம் 02 | 07-22 |
| அத்தியாயம் 03 | 23-47 |
| அத்தியாயம் 04 | 48-67 |
| அத்தியாயம் 05 | 68-77 |
| முடிவுரை | 78 |
| உசாத்துணை நூல்கள் | 79-80 |
| பின்னிணைப்புக்கள் | |
| புகைப்படங்கள் | 81-86 |
| வினாக்கொத்து | 87-90 |